# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 12 புதன்கிழமை (24-02-1999) UTHAYAN- A Lively National Tamil Daily கதிர்:76


# யாழ். நிலைவரம் குறித்து ஒபடகே ஜனாதிபதிக்கு நேரில் விளக்குவார்!

## ஓரிரு நாள்களில் சந்திப்பு

கொழும்பு, பெப்ரவரி 24

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பன குறித்தும்—

வடக்குக்கான போக்குவரத்துச் சீர்கேடு குறிந்தும்—

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என்.கே.ஒபடகே ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரவுள்ளார்.

கடந்த வாரம் யாழ். வந்திருந்த என். கே. ஒபடகே குடாநாட்டின் அத்தியாவசிய விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடியிருந்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கேட்டு மலைப்புற்ற அவர் கொழும்பு திரும்பியதும் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியை ஓரிருநாள்களில் சந்தித்து, யாழ். நிலை குறிந்து எடுத்துக் கூறி, உரிய நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்வதாக ஒபடகே குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் —

பாதுகாப்பு அமைச்சில் நேற்று மாநாடு ஒன்று இடம் பெற்றதாகவும் —

அதில் பாதுகாப்பு அதிகாரிகளுடன் வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் ஒபடகே மற்றும் அதிகாரிகள் பங்குபற்றியதாகவும்—

யாழ். நிலை தொடர்பாக அங்கு சில முடிவுகள் எடுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் காணப்பட்ட இளம் ஆணின் தலை!

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். நகரின் மையப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் காணப்பட்ட இளம் ஆண் ஒருவரின் தலை நேற்று நண்பகல் பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். நவீன சந்தைக்கு அருகே கஸ்தூரியார் வீதி ஆஸ்பத்திரி வீதி சந்திக்கும் இடத்தில் வடிகால் பகுதியை அண்டிக் காணப்பட்ட இந்த மனிதத் தலையை நேற்றுக் காலை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர்.

பின்னர் அப்பகுதி வீதிகளைப் படையினர் தடை செய்தனர்.

இந்த விடயம் பொலீஸாரால் யாழ். நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ ஈ. ஏகநாதனின் உத்தரவின்பேரின் மரண விசாரணை அதிகாரி க. கேசவன் சம்பவ இடத்தில் தலையைப் பார்வையிட்டு அதனை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் மூவர் கைது!

நல்லூர்ப் பகுதியில் கடந்த ஐந்து நாள்களில் படையினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி நல்லூர்ப் பகுதியில் வீடியோப் பிரதி எடுக்கச் சென்ற யாழ். சிவன் வடக்கு வீதியைச் சேர்ந்த - சங்கர்தேவர் சண்முகலிங்கம் (22 வயது), இலங்கநாதன் கஜேந்திரன் (22 வயது) ஆகியோரும்—

கடந்த ஞாயிறன்று கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த கந்தசாமி சத்தியசீலன் (26 வயது) என்பவரும்—

கைது செய்யப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [உ-3-5-15-173]

## கட்டிலிலிருந்து மற்றொரு நோயாளியும் வீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயம் மற்றொரு நோயாளியும் கட்டிலிலிருந்து கீழே வீழ்ந்து மரணமாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏழாலை கிழக்கைச்சேர்ந்த கணபதி சண்முகம் (வயது60) என்பவரே மரணமானார்.

இவர் கடந்த 20 ஆம் திகதி முதல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இவரின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காகப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதியும் யாழ். ஆஸ்பத்திரியில் கட்டிலில் இருந்து வீழ்ந்து திருமதி நாகராசா விஜயலக்ஷ்சுமி

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் நால்வர் மரணம்

வவுனியா பெப். 24

பல்வேறு சந்தர்ப்பங்களில் படையினருடன் ஏற்பட்ட மோதல்களில் தமது தரப்பில் நால்வர் உயிரிழத்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 12ஆம் திகதி குச்சவெளிகடற் பகுதியில் கடற் படையினருடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்திருந்த வைகுந்தன் (அன்ரனி சைமன் ஆனந்தவிமல்ராஜ்—யாழ்ப்பாணம்.)

கடந்த 20 ஆம் திகதி மாங்குளத்தில் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் நவி (பஞ்சாட்சரம் தணிகாசலம்—மாங்குளம்)—

கடந்த 21 ஆம் திகதி பரந்தனில் ஏற்பட்ட மோதலில் இளையவன் (இராமசாமி உதயகுமார்—கண்டி)—

நேற்று முன்தினம் ஒட்டுசுட்டானில் இடம் பெற்ற மோதலில் நந்த கோபன் (நடராசபிள்ளை காளிராசா—திருகோணமலை)—

ஆகியோரே உயிரிழந்தவர்கள என புலிகளின் குரல் வானொலி அறிவிந்தது

(உ-6)

## வவுனியாவில் காணாமற்போயுள்ள நால்வர் குறித்து விசாரணை செய்க!

### மன்னிப்புச் சபை கோருகின்றது

கொழும்பு, பெப். 24

வவுனியாவில் புளொட் அமைப்பினால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற் போனதாக கருதப்படும் நால்வர் தொடர்பாக உடன் விசாரணை மேற்கொள்ளுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று ஜனாதிபதியைக்கோரியுள்ளது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர், இராணுவத் தளபதி ஆகியோருக்கும்சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கண்ட கோரிக்கையைவிடுத்துள்ளது.

அந்தக் கோரிக்கை அடங்கிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

★ வவுனியா சாம்பல் தோட்டத்தைச் சேர்ந்த சிவம் அசோக்குமார் (வயது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் வெள்ளியன்று ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், பெப். 24

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் நன்மைகருதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணிமுதல் அதிகாலை 5.00 மணி வரையும் பருத்தித்துறை பிரதேசத்தில் மட்டும் ஊரடங்கு நீக்கப்பட்டிருக்கும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (உ-3)

## கரவெட்டி இளைஞரை காணவில்லை

யாழ்ப்பாணம், பெப். 24

கரவெட்டி கன்பொல்லை வீதியைச் சேர்ந்த இராஜரத்தினம் இராஜேஸ்வரன் (23 வயது) என்பவர் கடந்த 21 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து வெளியே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் நேற்று பெருங் கூச்சல், குழப்பம்

கொழும்பு, பெப். 24

ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் மேற்கொண்ட கூச்சல் குழப்பங்களால் நாடாளுமன்றம் நேற்று பத்து நிமிடநேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்குக் கூடிய போது நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக தம்மிக்க சிசில்கொட நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கே. பி. ரட்ணாயக்க அறிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பலத்த பாதுகாப்புடன் இந்திய - இலங்கை ரெஸ்ற் இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு, பெப். 24

கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் இன்று ஆரம்பமாகவிருக்கும் இந்திய — இலங்கை கிரீக்கெட் ரெஸ்ற் ஆட்டத்தையொட்டிகொழும்பில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை அணிகள் பங்குபற்றும் ஆசிய ரெஸ்ற் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அடையாள அட்டை பயணத்துக்கு அவசியம்!

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு கப்பல்மற்றும் விமானம் மூலம் பயணம் செய்யவிரும்புபவர்கள் தேசிய அடையாள அட்டையைச்சமர்பிக்கவேண்டும் என்றும்—

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு பயண அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும்—

யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னர் புலவர்

(புலவர் வீடியோ உரிமையாளர், கே. பி. புலவர்)

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கே. பி. புலவர் அவர்கள் 18 - 2 - 99 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர் செல்வி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணன் அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயாவதியின் அன்புக் கணவரும், றசீஸ்குமார் (ஹொலண்ட்), றஞ்சித்குமார் (ஹொலண்ட்), சோபனா (மாணவி, உயர்தரம் உடுவில் மகளிர் கல்லூரி), றமேஸ்குமார் ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-02-99) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**ரமேஸ்குமார்**
(மகன்)

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(63350)

## வேலுப்பிள்ளை சின்னத்துரை [V S]

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் கிழக்கு, ''மங்கள வாசாவை'' வசிப்பிடமாகவும் கொண்ட வே. சின்னத்துரை (V S) அவர்கள் 21-02-99 அன்று லண்டனில் காலமானார்.

இவர் வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், மீனாட்சியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் [பிரான்ஸ்], விஜயகாந்தன் [ஹொலன்ட்], ஜெயக்காந்தன் [லண்டன்], பிறேமகாந்தன் [பிரான்ஸ்], சியாமளா [லண்டன்], வாசுகி [கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவலிங்கம் [லண்டன்], புனிதா [பிரான்ஸ்], லொயாலா [ஹொலன்ட்], பிரபா [லண்டன்] ஆகியோரின் மாமனாரும் அபிநயா, அபிமஞ்சு, அபிராமி, பவித்திரன், யொரேம் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி. வினோபாகரன்**
[மருமகன்]

92/1 சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

[62354]

## கந்தையா சிவக்கொழுந்து

(முகாமையாளர், ப.நோ:கூ. சங்கம்புளியம் பொக்கணை)

விநாயகர் வீதி நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையைவதிவிடமாசவும்கொண்ட கந்தையா சிவக்கொழுந்து 22-02-99 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நுணாவில் கந்தையா-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக்கணவரும் மணிவண்ணன் (லண்டன்), கிரிஜா, விஜிதா (லண்டன்), காலஞ்சென்ற சிவரூபன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற இராசையா, மயில்வாகனம் (முரசுமோட்டை), இராசேந்திரம் (பிஸ்கால் ஊழியர், மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்), மகேஸ்வரி குஞ்சிதபாதம், கெங்கநாதன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் சகோதரரும் சிறீபாஸ்கரன் திருச்செல்வி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் பிரியங்காவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெளிமாவட்ட வீதி, வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**க. இராசேந்திரம்.**
(சகோதரன்)

விநாயகர் வீதி,
நல்லூர்.

(63364)

## சின்னத்தம்பி கனகரத்தினம்

(வர்த்தகர்)

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகரத்தினம் 23-02-99 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் பத்மாதேவியின் அன்புக் கணவரும் இராசசிங்கம் (வர்த்தகர்), இராசேஸ்வரி, ஜெகதீஸ்வரி (யாழ். பல்கலைக்கழகம், 97 ஆம் ஆண்டு தற்காலிக விரிவுரையாளர் — தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத தந்தையாரும் திருமதி இராசசிங்கம், திரிபுவண பெரும்தேவி (ஆசிரியை, மந்துவில் றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-02-99) புதன்கிழமை 12-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. இராசசிங்கம்** (சிங்கன்)
(மகன்)

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(சி/6596)

# பஸ் சேவை நடத்துமாறு கோரிக்கை

கோப்பாய், பெப். 24

கோப்பாய்க்கும் மானிப்பாய்க்கும் இடையே பஸ் சேவையை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் சாவகச்சேரிக்கும் மானிப்பாய்க்கும் இடையில் பஸ் சேவைகள் நடைபெற்றன, ஆனால் மீளக்குடியமர்வின் பின் இராணுவம் கோப்பாய், கைதடி வீதியை பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடாததால் அது சாத்தியமற்றதாகியது.

கோப்பாய், உரும்பிராய் போன்ற பகுதிகளில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக மானிப்பாய் போன்ற பகுதிகளுக்கு மக்கள் பயணம் செய்வதாயின் தற்போது யாழ்ப்பாணம் சென்றே பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

(இ - 72)

# கூட்டுறவுச் சங்க தலைவர்கள் கூட்டம்

அரியாலை, பெப். 24

யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒழுங்கு செய்த கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சமாச அலுவலகத்தில் நடைபெறும்

சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் யாழ் அரச அதிபர் கே. சண்முகநாதன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வருவது மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம் போன்ற விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

(இ-17)

ராஜா
யாழ்ப்பாணம்.
3ஆவது வெற்றி வாரமாக
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
காதல் கோட்டை
இன்று காட்சிகள்
10-30, 2-30
(சி/6565)

நாகம்ஸ்
சுன்னாகம்.
கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி
நடித்த
உள்ளத்தை
அள்ளித்தா
ரசிகர்களின் பஸ் போக்குவரத்து வசதி கருதி
காட்சி நேரங்களில்மாற்றம்
புதிய நேரப்படி
11-00, 2-30
(63380)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
மம்முட்டி - நெப்போலியன்
சிமரன் - கவுண்டமணி
நடித்த
எதிரும் புதிரும்
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
(வழமை நேரம்)
T. P. No; 070-212223
(63315)

# குடும்பஸ்தர் மரணம்:

# படையினரை மன்றில் ஆஜர் செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 24

கடந்த மாதம் 24 ஆம் திகதி குருநகர்ப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த குடும்பஸ்தரான ஆசீர்வாதம் திவ்வியநாதனின் மரணம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ். மேலதிக நீதி

[10 ஆம் பக்கம் பார்க்க]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி துரைச்சாமி அம்பிகை

அராலி மத்தியைச் சேர்ந்த திருமதி துரைச்சாமி அம்பிகை நேற்று (23-02-99) இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் துரைச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாதேவன், சகாதேவன் (நோர்வே), வாமதேவன், ஞானதேவன் (கொமஷல் கம்பனி, கொழும்பு), பாலதேவன் (நீர்ப்பாசனத்திணைக்களம், கந்தளாய்), ஞானேஸ்வரி, ஞானதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜராஜேஸ்வரி (நோர்வே), பிரேமகுமாரி, வைத்திய கலாநிதி நளாயினி (போதனா வைத்தியசாலை, கொழும்பு), பரமேஸ்வரி (கால்நடை வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜ்தேவன் (நோர்வே), சத்தியா (நோர்வே), லிங்கேஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி), அகிலேஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி), கீர்த்தனா (யாழ்ப்பாணக் கல்லூரி), சரணியா (மகளிர் கல்லூரி, கொழும்பு), சபேஷன் (யாழ். இந்துக்கல்லூரி), ஜெகாமபிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-02-99) புதன்கிழமை காலை 10-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூணாவடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**து. வாமதேவன்**
(மகன்)

''திருப்பதி'',
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

[63367]

## சிதம்பரப்பிள்ளை அம்பலவாணர்

(காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன முன்னைநாள் இயந்திர இயக்குநர்)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சி. அம்பலவாணர் 22 — 2 — 1999 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் குணவதியின் அன்புக் கணவரும் சிதம்பரநாதன் (சுவீஸ்), புஸ்பநாதன் (சுவீஸ்), சண்முகநாதன் புனிதவதி, அருந்ததி, அமரத்துவம் அடைந்த விமலநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாரஜனி (சுவிஸ்), ஜெயலட்சுமி (சுவீஸ்), சிவலிங்கம் (செயலாளர், நீர்வேலி ப. நோ. கூ. சங்கம்), ஸ்ரீதரன் (எழுதுவினைஞர், நல்லூர் பி. தே. ச.) ஆகியோரின் மாமனாரும் விஷ்னுசா (சுவிஸ்), ஐதுராம், ஐதுசாயினி ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது குடும்பமயானத்தில் நேற்று 23 - 2 - 99 அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**அ. குணவதி**
(மனைவி)

சிறுப்பிட்டி வடக்கு,
புத்தூர்.

(63388)

## சின்னையா நல்லையா

(மண்டைதீவு)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னையா நல்லையா நேற்று (23-2-99) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் யாதவகுலசிங்கம் (முன்னாள் தபாலதிபர்), சாந்தகுலசிங்கம், குணநிதி, காலஞ்சென்ற குமாரகுலசிங்கம், யோகநிதி, இராஜகுலசிங்கம் (கொழும்பு), செல்வநிதி, விஜயசுந்தரம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி), தெய்வநிதி சிவகுலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தரூபன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக் கழகம்), ஸ்ரீ பத்மராஜா, சற்குணலிங்கம் (சிறுவர் பாதுகாப்பு நிதியம், யாழ்ப்பாணம்), சற்குணராணி (ஆள்பதிவுத் திணைக்களம், யாழ். செயலகம்), சகுந்தலாதேவி, சாரதாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் குகதர்சன், மனோதர்சினி, துவாரகா, துஷ்யந்தி, விஜயசாயி, அருணன், அஜந்தன், சுகன்யா, தினேசன், திவியன், துவாரகன், பிரவீணா, கீர்த்தனா, லோஜிதா, குகன்யா, ஐங்கரி, சர்மிலன், பராஸ்கனி, யசிதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, யோகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

17, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிர் விண்வெளி நிலையத்துக்கு மூவர் அடங்கிய குழு பயணமாகியது

பைகானூர், பெப். 24

விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் மிர் விண்வெளி நிலையத்துக்கு கடைசி விண்வெளி வீரர்கள் குழு கடந்த சனிக்கிழமை பயணம் செய்தது.

கஷகஸ்தான் நாட்டின் பைகானூர் ராக்கெட் ஏவு தளத்திலிருந்து புறப்பட்ட இந்தக் குழுவில் ரஷ்யாவைச் சேர்ந்த விக்டர் அப்பனாஸியேவ், ஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த இவான் பெல்லா, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் பியரி ஹைஹ்னேர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் 6 மாதம் மிர் விண்வெளி நிலையத்தில் தங்கி பல்வேறு ஆய்வுகளைச் செய்து முடிப்பர்.

இந்த ஆய்வின் பின்னர் மிர் விண்வெளி நிலையத்தைப் பயன்படுத்த ரஷ்யாவிடம் போதிய பண வசதி இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மிர் விண்வெளி நிலையத்தில் ஏற்கனவே உள்ள ஒரு ரஷ்ய விண்வெளி வீரரும், இவான் பெல்லாவும் எதிர் வரும் 28 ஆம் திகதி பூமிக்குத் திரும்பி விடுவர்.

அப்பனாஸியேவும், ஹைஹ்னேரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி பூமிக்குத் திரும்பி விட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த விண்வெளி நிலையத்தைத் தொடர்ந்து இயங்கச் செய்ய எவராவது பண உதவி செய்யத் தயார் என்றால் இந்த இருவரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி திரும்பி விடுவர்.

பண உதவி கிடைக்கவில்லை என்றால் மிர் விண்வெளி நிலையத்தை நிரந்தரமாக மூடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடிக்க இருவரும் சில நாள்கள் அங்கு தங்குவர்.

சோவியத் யூனியன் என்ற வல்லரசு இருந்ததற்கு விண்ணுலகில் ஒரு சாட்சியாக இருப்பது மிர் விண்வெளி நிலையம் தான்.

விண்வெளி வீரர்கள் நிரந்தரமாகத் தங்கி ஆய்வுகள் மேற்கொள்வதற்காக கட்டிவிடப்பட்ட நிலையம் மிர்.

இது பூமிக்கு நேராக பூமி சுற்றும் அதே வேகத்தில் அதே திசையில் சுற்றிக் கொண்டிருக்கின்றது.

(இ-க-10)

உலக அரங்கில்

# துருக்கியில் 1,500 பேர் கைது

இஸ்தான்புல், பெப். 24

துருக்கியின் தலைநகர் இஸ்தான் புல்லில் இதுவரை சுமார் ஆயிரத்து 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குர்டிஷ் கெரில்லாத் தலைவர் அப்துல்லா ஒகலன் கைது செய்யப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதேவேளை துருக்கியில் பல கடைகளும் வாகனங்களும் குர்டிஷ்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

(இ-க)

# ஒளியின் வேகத்தைக் குறைத்துச் சாதனை!

வாஷிங்ரன், பெப், 24

ஒளியின் வேகத்தை மணிக்கு 71 கிலோ மீற்றராக அதாவது நொடிக்கு 17 மீற்றராகக் குறைத்து டென்மார்க் விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர்.

மனித குலம் இதுவரை அறிந்துள்ளவற்றில் மிக வேகமாகப் பயணம் செய்யக் கூடியது ஒளி. அதன் வேகம் நொடிக்கு 3 லட்சம் கிலோ மீற்றர் ஆகும்.

வெற்றிடத்தில் நொடிக்கு 3 லட்சம் கிலோ மீற்றர் தூரம் செல்லும் ஒளியின் வேகத்தைக் குறைத்துச் சாதனை செய்துள்ளனர் விஞ்ஞானிகள்.

இந்தச் சாதனையைப் புரிந்தவர்கள் டென்மார்க்கைச் சேர்ந்த இயல்பியல் பெண் விஞ்ஞானி லீன் வெஸ்டர்காட் ஹாவ்வும் அவரது குழுவினருமே.

இவர்கள் அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலும் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் உள்ள செளலாண்ட் அறிவியல் கழகத்திலும் பணியாற்றி வருகின்றனர்.

சார்பியல் தத்துவத்தை வகுத்த ஆல்பேர்ட் அயன்டீன், இந்தியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற விஞ்ஞானி சத்யேந்திர நாத் போஸ் ஆகியோர் அணுவைக் குளிரூட்டி இயங்கா நிலையில் நிறுத்தலாம் என்னும் இயல்பியல் கொள்கையைக் கண்டு பிடித்தனர்.

அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது தான் போல் அயன்டீன் கண்டன்ஸேட் என்ற திரவப் பொருள்.

இது மிகக் குளிர்ந்த நிலையில் இருப்பதால் அதில் அடங்கியிருக்கும் அணுக்கள் இயங்கா நிலையில் இருக்கும். ஆனால் அதிலிருக்கும் மொத்த அணுக்களும் சேர்ந்து ஒரேயொரு பேரணுவாக இயங்கும்.

அதன் ஊடாக ஒளியைச் செலுத்திச் சோதனை செய்தார் விஞ்ஞானி ஹாவ்.

அதை ஒளி ஊடுருவி வந்த போது பாய்ச்சப்பட்ட ஒளியில் 25 சத வீதமே வெளியேறியது. அத்தோடு அதன் வேகம் மிகக் குறைந்து மணிக்கு 71 கிலோ மீற்றர் ஆகியது.

தகவல் தொடர்பு, இரவு நேரப் பார்வைக் கருவிகள், கணனிகள் ஆகியவற்றுக்கு இந்த கண்டுபிடிப்பு பயனுள்ளதாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

[இ-க-10]

# மீளக் குடியமர்வு கொடுப்பனவுக்கு மேலும் 15 கோடி ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப்.24

யாழ். குடாநாட்டில் மீளக் குடியமர்ந்தோருக்கான ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவை வழங்கவென வடமாகாண மீள்குடியேற்ற அதிகார சபை மேலும் 15 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறுவதற்கென பல்லாயிரக் கணக்கானோர் கடந்த வருடம் தத்தமது பிரதேச செயலகங்கள் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

இவ்வாறு தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கு படிப்படியாக மேற்படி மீளக்குடியமர்வு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது. (இ-7)


## விற்பனைக்கு

மின்சாரத்தின் மூலம் கோழிகள் கோழிக்குஞ்சுகளுக்கு சொண்டு வெட்டும் உபகரணம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு முகவரி:

EDNA DISTRIBUTERS.

KURINCHI PHARMACY,

558, HOSPITAL ROAD, JAFFNA.

(63378)


# கருத்தரங்கு

கோப்பாய், பெப். 24

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பகுதி — டி நடத்தும் கருத்தரங்குத் தொடர்—6 இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் 'சேது சமுத்திரத்திட்டம்' என்ற தலைப்பில் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கருத்துரை வழங்குவார். (இ-5-72)

# கடற்றொழில் பரிசோதகரை நியமிக்க கோரிக்கை

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்கில் உள்ள தாளையடி, ஆழியவளை, குடத்தனை ஆகிய பகுதிகளுக்கு கடற்றொழில் பரிசோதகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு செயலகத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரை கோருவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-36)

# வடமராட்சி கிழக்குக்கு முந்திரிகைக் கன்றுகள்

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்கில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிப்பதற்காக முதல் கட்டமாக இப்பகுதியில் 4 ஆயிரம்மரமுந்திரிகைக் கன்றுகள் நடப்பட உள்ளன.

ஒவ்வொருகிராமசேவையாளர் பிரிவிலும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மரமுந்திரிகைக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட உள்ளன.

(இ-36)


## உளப்பூர்வமிக்க நன்றி நவிலல்

அமரர், திருமதி

**புஷ்பமலர் பஞ்சாட்சரம்**

[ நீர்வேலி ]

அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை

▼ யாழ். போதனா மருத்துவமனையில் கருணை உள்ளத்துடன் வேண்டியன செய்த எம் போற்றற்குரிய

**வைத்திய கலாநிதி எஸ். ஆனந்தராஜா**

அவர்களுக்கும்

▼ அவசர, துரித கண்காணிப்பு பிரிவு, இரண்டாம் வார்ட் ஆகியவற்றில் கடமை உணர்வுடன் பணியாற்றிய

**வைத்திய அதிகாரிகள், தாதிமார்கள்**

ஆகியோருக்கும்

▼ சிவபதமடைந்த வேளை, தோன்றாத் துணையாயுடன் நின்று உதவிய அருமை அன்பு இதயங்களுக்கும்,

▼ நேரில் சமுகமளித்தும், மலர் வளையங்கள் வைத்தும், தபால், தந்தி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தும், இரங்கல் உரையாற்றியும், எம் துயரில் பங்கு கொண்ட மதகுருமார், அயலவர், அருமை அன்பர்கள், உற்றார், உறவினர் ஆகிய எல்லோருக்கும் அமரரின் குடும்பத்தினர் கரம் கூப்பித் தம் நன்றியை நவில்கின்றனர். தனித் தனி தம் நன்றியைத் தெரிவிக்க இயலாமைக்கு மனம் வருந்துகின்றனர்.

வணக்கம்!

**அமரரின் குடும்பம்.**

நீர்வேலி.

(63374)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**கந்தையா முத்தையா**

(கோண்டாவில் வடக்கு)

மலர்வு 06 - 10 - 1924

உதிர்வு 25 - 01 - 1999

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்மை
பாசத்துடன் வழி நடத்திய அன்புத் தெய்வமே!
உங்கள் புன்முறுவல் பூத்த முகத்தை நாம்
இனிக் காண்பதெங்கே?
எம் வாழ்வைச் சிறப்பிக்க வழி காட்டிய ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறையருளை
வேண்டி நிற்கின்றோம்.

இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு24.02.99 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்,

**மக்கள், மருமக்கள்: பேரப்பிள்ளைகள்.**

கோண்டாவில் வடக்கு,

(63376)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

24 FEB 1999

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த சு. ஜயந்தன் ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை(791792380V), விசேட அடையாள அட்டை (091001087) ஆகியன யாழ்ப்பாணத்துக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தில் ஒப்படைக்கவும்.

(63349)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க வர்த்தகத் திணைக்களத்தில்முகாமையாளராகக் கடமை புரியும் 1975 ஆம் ஆண்டு பிறந்த தங்கள் மகனுக்கு கல்வி அறிவுள்ள அழகான மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: இல. 849, மே/பா. உதயன்.

(63336)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல 31, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (63332)

## ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயில ஆண்டு 3இல் இருந்து 10 வரை. ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சங்கானை பிரதான வீதி, தபாற் கந்தோர் அருகில், சங்கானை. (63312)

## விற்பனைக்கு

2000 KVA Stabi Guard Computer-க்குஉகந்தது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. ரவீந்திரராசா, No. 6. யுபிலி பசார், மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

(சி/6588)

## தொலைபேசி சேவை

வலி. கிழக்கு, பெப். 24 புத்தூரில் இயங்கும் வலிகாமம் கிழக்கு வட பகுதி அச்சுவேலி கூட்டுறவுச் சங்கத்துக்குத் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ-180)

## யாழ்ப்பாணம்

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் மூன்று நூல்களையும் வாங்குபவர்களுக்கு 20%. கழிவு தரப்படும். நேரில் வருக. 30, கடையிற் சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் விலை ரூபா50

(63338)

## ENGLISH/ சிங்களம்

General English - Grammar/ Speech Writing உள்ளடக்கிய கிரமமான பயிற்சி வகுப்புக்கள் சனி/ ஞாயிறு பி. ப. 3-00 மணி சிங்களம் புதிய பிரிவு விரைவில்- சனி, ஞாயிறு நேரம் காலை 10.00 மணி. T. Sagatheven B. A. (Lond), 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(63269)

# கண்ணீர் அஞ்சலி

## பொன்னர் புலவர்

''பல்லோருடனும் பாடறிந்து ஒழுகலின்
வல்லவன் கோண்டாவிலின் வள்ளல்
நல்லோன் பிரிவு இனத்துக்கோர் பேரிழப்பு
தில்லைக்கதிபதி தாளில் நிலைத்திடுவார் அவரே''

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக.

— மகேஸ்வரன் கராஜ்,
— S. நவரெத்தினம்,
— M, கெங்காதரன்,
— M. மகேஸ்வரன்.

டிப்போ சந்தி.
கோண்டாவில்.

[63369]

# வாழ்த்துகின்றோம்

## கற்கோவளம் உதயதாரகை

விளையாட்டுக் கழகத்தின்
சிரேஷ்ட உறுப்பினரும்

அமரர் சாண்டோ துரைரத்தினத்தின்
முதல் நிலை மாணவனுமாகிய

**திரு. நாகராஜா விஜயமோகன்** அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட எமது கழக உறுப்பினர்கள் குடா நாட்டின் பல்வேறு இடங்களில் வீரசாகசங்களை நடத்தி எமது கழகத்திற்கு பெருமையையும் கௌரவத்தையும் தேடித் தந்து கொண்டிருப்பதையிட்டு மனமாரப் பாராட்டுகின்றோம்.

கழக வீரர்கள்

- சி. இராமஜெயம்
- வே. சிவானந்தம்
- த. தூயவன்
- ச. சுந்தர்ராஜன்
- சி. இராமேஸ்வரன்.

அனைத்து நிகழ்வுகளுக்கும் ஒத்தாசை புரியும் கழக உறுப்பினர் கா. சுதாகரனுக்கும் எமது வாழ்த்துக்கள்.

உதயதாரகை விளையாட்டுக் கழகம்

சோ. ஞானமுரளி
தலைவர்

அ. அற்புதரஞ்சன்
செயலாளர்

(சி/6589)

# கண்ணீர் அஞ்சலி

## பொன்னர் புலவர்

(புலவர் வீடியோ உரிமையாளர்)

பொன்னர் புலவர் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்
திருவீடியோ விஷன்
கரவெட்டி.

(63365)

அமரர்

# சரவணமுத்துசேதுகாவலர்

Bilingual, Trained, B. A Dip in Ed. M, A Law Part 11
(LEGAL TRANSLATOR)

## 87 ஆவது பிறந்த நாள் நினைவில்

(24 - 02 - 99)

1998 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் விசேஷமாக சுன்னாகம் ஸ்கந்தாவின் வரலாற்றை கடைப்பிடித்து தம்மை தியாகம் செய்து கணித, விஞ்ஞானதுறையில் சித்தியெய்தியவர்களாகிய

தி. வரோதயன், பா. சுவர்ணதாசன்,
தே. சேத்திரபாலன், இ. குமணன்

ஆகியோருக்கும் ஏனைய கல்லூரிகளில் சித்தி அடைந்த மாணவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து,

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் நலன் விரும்பி அமரர் சரவணமுத்து சேதுகாவலரின் 87 ஆவது பிறந்த தின நினைவாக விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளில் யாழ். மாவட்டத்தில் முதலாவது நிலைக்குத் தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்க உள்ளோம்.

மேற்படி மாணவர்கள் தங்களின் உறுதிப்படுத்தப்பட்ட விபரமான தரவுகளுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: —

**சேதுவிபுலானந்தா**

SARAA SETHU SERVICES — VIPA ORBIT SERVICES

207, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

(சி/6582)


அழகிய வடிவமைப்புகளும் இதமான வர்ணங்களும்

உஷ்ணத்தை வெல்லுங்கள், நிப்போன் குளுமையைக் கொண்டு குளுமை பெறுங்கள்

ஏராளமான தொகுதிகளிலிருந்து உங்கள் தேர்வை தெரிவு செய்து கொள்ளுங்கள்

FREE MASSAGER WITH BOX STAND FAN ONLY

எவற்றுடனும் ஒப்பிடமுடியாத விலைகள்




வியாபாரிகளுக்கு விலைச் சலுகை உண்டு




INSIST ON NIPPON GUARANTEE CARD

LANKA NIPPON Antenna (Pvt) Ltd.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 320961, 335301, 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4.
Tel: 589932




AVAILABLE ISLANDWIDE


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெங்காயத்துக்குப் பதிலாக
# கிழங்கு வகைகளை பயிரிடுவதில் அதிக கவனம் செலுத்துமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப். 24

வடபகுதி விவசாயிகள் தமது நலன்கருதி வெங்காய உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்துவதைக் குறைத்து வருமானம் தரும் கிழங்கு வகைகளைக் கூடுதலாக உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று திருநெல்வேலி விவசாயப் பண்ணை அறிவுறுத்தி உள்ளது.

வடபகுதி விவசாயிகள் வருமானம் கருதி அதிக அளவில் வெங்காயத்தைப் பயிரிடுவதை வழமையாகக் கொண்டுள்ளனர்.

வருமானம் நோக்கிப் பயிரிடப்படும் வெங்காயப் பயிர் இவர்களுக்குக் காலத்துக்குக் காலம் நட்டத்தையே ஏற்படுத்தி வருகிறது.

வெங்காயப் பயிர் ஒரு குறுகிய காலப் பயிர். அத்துடன் குறுகிய காலத்தில் பழுதடைந்தும் விடுகிறது.

இதனை நீண்ட நாள்களுக்குப் பாதுகாத்து வைக்கவும் முடியாது.

தென்னிலங்கைக்கு ஏற்றுமதிசெய்வதானாலும் முறைப்படி பாதுகாக்க முடியாததால் ஏற்றுமதியாக்கும் நாள்களிலேயே குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைவதற்கிடையிலேயே வெங்காயம் பழுதடைந்து போகிறது.

தற்போதைய போக்குவரத்துக்கள் சீரற்ற நிலையில் கடல் மார்க்கமாகவே வெங்காயத்தையோ அல்லது வேறு மரக்கறி வகைகளையோ தென்னிலங்கைக்கு அனுப்ப வேண்டியுள்ளது.

கடல் மார்க்கமாக வெங்காயத்தை அனுப்பும்போது கப்பலின் உட்பகுதியில் காற்றுப் புகாமல் நாள்கணக்கில் அடைபட்டுக்கிடப்பதால் உரிய இடத்திற்குச் சென்றடையமுன்பே அழுகிப் பழுதடைந்து பாவனைக்குதவாத நிலை உண்டாகிறது.

இதனால் இவற்றை அனுப்பும் விவசாயிகளோ, வியாபாரிகளோ பொருள்களைப் பாதுகாக்க முடியாமல் நட்டத்தையே அடைய நேரிடுகிறது.

சீரான போக்குவரத்து நிலவியகாலத்தில் இந்தப் பொருள்களை ஒரே நாளிலேயே தென்னிலங்கைக்குக் கொண்டுபோகக் கூடிய வாய்ப்பு இருந்தது. அதனால் அக்கால வேளையில் அனைவரும் நல்ல வருமானத்தைப் பெறக்கூடியதாக இருந்தது உண்மைதான்; ஆனால் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டே தற்காலத்திற்குஏற்ப தாக்குப்பிடிக்கக்கூடிய விதத்திலான கிழங்குப் பயிர்களான, கருணைக்கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு, மோதகவள்ளிக் கிழங்கு போன்றவற்றைப் பயிரிடுவதால் விவசாயிகள் அதிக வருமானத்தைப் பெற முடியும்.

இந்தப்பயிர்கள் நாள் நீண்ட பயிரினம் ஆனாலும், நீண்ட காலத்துக்குப் பழுதடையாது பாதுகாக்கக்கூடியவை.

அத்தோடு இவற்றுக்கு தென்னிலங்கையிலும் நல்ல சந்தைவாய்ப்புக்கள் உள்ளன.

தென்னிலங்கையில் கிராக்கியுள்ள இப்பொருள்களை அதிக அளவில் பயிரிடுவதால் விவசாயிகள் எக்காலத்திலும் நட்டமடையாத நிலையில் தம் விவசாயத்தையும் வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## பாடசாலைக் கொட்டகை வேயப்படாத நிலையில்!

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளின் தற்காலிக கொட்டகைகள் நீண்ட காலமாக வேயப்படாமையால் இப்பகுதியில் உள்ள மாணவர்கள் வெயிலிலும் மழையிலும் பெரும் சஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து பரிகாரம் காண அப்பகுதி நலன் விரும்பிகளை உள்ளடக்கிய மூவர் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழு விரைவில் வலயம் – 2 கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கும்.

(இ-36)

## வடமராட்சி கிழக்கில் மண் அள்ளுவதற்குத் தடை

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்கில் மணல் அள்ளுவது எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

மணல்காடு, குடத்தனைப் பகுதிகளில் இருந்து பெருமளவு மணல் அள்ளப்பட்டுள்ளதால் இப்பகுதிகளுக்குள் கடல் நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மணல்காடு, குடத்தனைக் கரையோரக்கிராமங்கள் அழிவடைவதுடன் அம்பனில் இருந்து செம்பியன்பற்று வரை விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்படும் அபாயம் உருவாவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-36)

## மாதகல் பஸ் சேவையை ஆரம்பிக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், பெப். 24

யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து மானிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களுக்குஊடாக மாதகல்வரை நடத்தப்பட்டு வந்த 787 ஆம் இலக்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பித்து நடத்துமாறு மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வட பிராந்திய போக்கு வரத்துச் சபையின் பொது முகாமையாளருக்கு மேற்படி சங்கம் கடந்த வாரம் மகஜர் ஒன்றை அனுப்பியது.

இந்த பஸ் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு போக்குவரத்து வசதி கிடைக்கும் என்றும் தற்போது புதிய பஸ் வண்டிகள் வந்து சேர்ந்துள்ளதால் இச்சேவையை விரைவில் ஆரம்பித்து உதவுமாறும் மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [ஐ-135]

## சுகாதார நிலையங்களுக்கு தளபாடங்கள்

சண்டிலிப்பாய், பெப். 24

வலி. தெற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள தாய்—சேய் சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான இருக்கை வாங்குகள் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. வலி. தெற்கு பிரதேச செயலகம் கடந்த 1998 ஆம் ஆண்டு இதற்கென ஓர் இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது. இந்த நிதியிலிருந்து பெறப்பட்ட மேற்படி இருக்கை வாங்குகள் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக இப்பகுதியிலுள்ள தாய்—சேய் சிகிச்சை நிலையங்களுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

ஐ–)135ப)

## ஹைக்கோ தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 24

வடமராட்சிப் பகுதியில் பாண் மற்றும் பேக்கரி உணவுப் பொருள்களைத் தயாரிப்பதற்குத் தேவையான ஹைக்கோ, மாஜரின் ஆகிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் பாண் தயாரிப்பு குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## மோசமான வீதிகள்

செம்பியன்பற்று, பெப். 24

வடமராட்சி கிழக்கு மணல்காடு, மாமுனை, நாகர்கோயில் உள் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

இந்த வீதிகளால் [illegible] ளில் கூட செல்ல [illegible] நிலைமை ஏற்பட்டுள்ளது.

(இ-36)

## கசிப்பு வேட்டை

யாழ்ப்பாணம், பெப். 24

மதுவரித் திணைக்களத்தினரின் கசிப்பு வேட்டையில் ஐவர் கசிப்புடன் பிடிபட்டனர்.

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினமும் கடந்த வியாழக்கிழமையும் இந்தக் கசிப்பு வேட்டை நடத்தப்பட்டது.

தென்மராட்சிப்பிரிவு மதுவரிப் பொறுப்பதிகாரி றொஹான் ராஜு தலைமையிலான குழு இந்தக் கசிப்பு வேட்டையை நடத்தியது.

(இ-15)

## நெல் அறுவடை பாதிப்பு

சண்டிலிப்பாய், பெப். 24

அண்மையில் பெய்த மழையினால் சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பகுதிகளில் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. பள்ளமான வயற்காணிகள் சேறும் சகதியுமாக இருப்பதாலும் சில இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும் நெல் அறுவடை மேற்கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறுமழைதொடர்ந்து பெய்வதால் வெங்காய செய்கைக்கும் புகையிலைக் கன்றுகளுக்கும் [illegible] பாதிப்பு ஏற்படலாம் என்று விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

(ஐ-135

## 126 தபாற்பொதிகள் நேற்று வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ் மாவட்டத்துக்குரிய வெளியூர்த்தபால்கள் அடங்கிய 126 தபாற்பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமாக நேற்று யாழ். எடுத்து வரப்பட்டன.

இதேவேளை குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சேகரிக்கப்பட்ட வெளியூர்த்தபால்கள் அடங்கிய ஒரு தொகுதி தபாற்பொதிகள் நேற்றைய தினம் மேற்படி கப்பல் மூலம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்று எடுத்து வரப்பட்ட தபாற்பொதிகள் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (இ-7)

## வாக்காளர் பதிவுச்சான்றிதழுக்குப் பதிலாக கிராமசேவகரின் உறுதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், பெப். 24

எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக அடுத்த மாதம் முற்பகுதியில் இடம்பெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோர் வாக்காளர் இடாப்புப்பிரதிக்குப் பதிலாக கிராமசேவகரின் சான்றிதழைச் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி நேர்முகப்பரீட்சைகளுக்குத் தோற்றுவோர் தத்தமது வாக்காளர் இடாப்புப் பத்திரத்தின் மூலப்பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதியைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்களை அடுத்து ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தத்தமது பிரிவுக் கிராம சேவகரிடம் தமது குடும்பத்துக்கான வாக்காளர் பதிவினை உறுதி செய்து அக்கடிதத்தினை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-7]

## பரமசாமிக் குருக்களின் பவளவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 24

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய விசேஷ குருவும், முதுபெரும் அந்தணச் சிவாச்சாரியாருமான கோப்பாய் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்களின் பவளவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் த. சிவகடாட்சம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் மங்களஇசை, வேத பாராயணம், தோத்திர பாராயணம் மற்றும் திருமுறைப்பாராயணம், ஆசியுரை, வாழ்த்துரைகள், மலர் வெளியீடு என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறவுள்ளன.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

வாழ்த்துரைகளை துவைத்திலிங்கம், நா. சுப்பிரமணிய ஐயர், ஐ. மகேஸ்வரக்குருக்கள், தா. மகாதேவக்குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆ. தியாகராஜா, ஈ. ஏகநாதன், க. கேதீஸ்வரன், ஆறு. திருமுருகன், அ. இராசரத்தினம், ச. விக்னேஸ்வரன், த. தர்மராசா நா. க. சண்முகநாத பிள்ளை, வை. குணசேகரம், எஸ். கே. தங்கவடிவேல் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து பவளவிழாவை ஒட்டியமலரினதும், வில்வாஷ்டோத்திரசதகம், கர்மானுஷ்டான வினாவிடை, சிரார்த்த தீபிகை ஆகிய மூன்று நூல்களினதும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் நிகழ்த்துவார்.

நீர்வேலி கந்தசுவாமி ஆலயப் பிரதம குரு சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் விழா நாயகரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

பின்னர் விழா நாயகருக்கு ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி, ஸ்ரீ வித்யா ஸாகரம் என்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தல் இடம் பெறும்.

தொடர்ந்து வீணை இசை, பஞ்சரத்தின கீர்த்தனை, வில்லிசை முதலிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

(இ-7)

## 25 பெண்களுக்கு ஆடு வளர்க்க கடன் உதவி

வலி. கிழக்கு, பெப். 24

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலி மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் உள்ள 25 பெண் சுயதொழிலாளர்களுக்கு ஆடு வளர்ப்புக் கடனாக தலா 5ஆயிரம் ரூபா தமிழர் புனர் வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

கடந்தவாரம் அச்சுவேலி மேற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து ஆடு வளர்ப்பில் ஊக்கமுள்ள 25 பெண்களுக்கே இந்த கடனுதவி வழங்கப்பட்டது. முன்னரும் 25 பேருக்கு இந்த உதவி வழங்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த எஸ். நல்லதம்பி, கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்ட மிடல் பணிப்பாளர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(இ-180)

## ஜீவாகாரம்

சண்டிலிப்பாய், பெப். 24

இணுவில் தெற்கு அண்ணா சனசமூக நிலையத்தில் போஷாக்குக் குறைந்த பாலூட்டும் தாய்மார், கர்ப்பவதிகள் ஆகியோருக்கு இலவசமாக ஜீவாகாரம் உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகின்றது.

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் திருமதி வனஜா கமலேஸ்வரன் மேற்பார்வையில் தினமும் இந்த ஜீவாகாரம் போஷாக்கு உணவு தயாரிக்கப்பட்டு சுகாதார தொண்டர்களின் உதவியுடன் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையம், உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் ஜீவாகாரம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

வலி. தெற்கு பிரதேச செயலகத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியைக்கொண்டு இந்த ஜீவாகாரம் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் [stamp]

## மாறுபட்ட விலைகளில் பாண் விற்பனை

வடமராட்சி, பெப். 24
வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள கிராமப் புறங்களில் பாண் 7 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

குடாநாட்டில் பாணின் விலை 9 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள போதிலும், இந்தக் கிராமப் புறங்களில் உள்ள கடைகளில் ஏட்டிக்குப் போட்டியாக பாண் 7 ரூபா 50 சதமாக விற்கப்படுகிறது.

7 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படும் பாண் வழமையான பாணின் நிறையிலும் பார்க்க 50 அல்லது 60 கிறாம் குறைவாகவே இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள நகர்ப் புறங்களில் பாண் 9 ரூபாவாகவே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேசமயம்யாழ். நகரிலும் விசேட பாண் என்ற பெயரில் 10 ரூபாவுக்கும் பாண் விற்கப்படுகிறது.

முரண்பாடான விலைகளில் பாண் விற்பனை செய்தல், நிறைகுறைந்த பாண் விற்பனை செய்தல் தொடர்பாக பேக்கரி உரிமையாளர் சங்க மோவிலைக்கட்டுப்பாட்டுத்திணைக்களமோ அக்கறை கொண்டதாக இல்லை என்று கூறப்படுகிறது.

(இ–173)

## போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து விளக்கம்

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து விளக்கப்படங்களுடன் பொலீஸாரினால் விளக்கமளிக்கப்பட்டு வருகிறது.

(இ–173)

## பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 24
அளவெட்டியில் ஆள்கள் இல்லாத வீடுகளில் ஜன்னல், கதவு உட்பட பல பொருள்களைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட இருவர் நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கந்தசாமி சிவகரன் (வயது 24, அளவெட்டி) தம்பிராசா ஸ்ரீகுமார் (வயது 21. அளவெட்டி) ஆகிய சந்தேக நபர்களை தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல பதில் நீதிவான் அனுமதித்தார்.

(இ - 5)

## குளமங்காலில் சிறுவர் பாடசாலை

வலி. வடக்கு, பெப், 24
மல்லாகம் குளமங்கால் கிராமச் சிறுவர்களின் கல்வி அபிவிருத்திக்காக மனித முன்னேற்ற நடு நிலையத்தினால் புனித பிரான்சிஸ் சவேரியார் சிறுவர் பாடசாலை என்ற பெயரில் பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பங்குத் தந்தை வண. பிதா க. ஞானப்பிரகாசம் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

இந்தப் பாடசாலைக்கு வேண்டிய தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை மனித முன்னேற்ற நடு நிலையப் பணிப்பாளர் வண. பிதா கி. ஜெயக்குமார் வழங்கி சிறுவர் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்.

(இ-86)

## உளவளத் துணையாளர் சங்கம்

வலி. வடக்கு, பெப். 24
வடமாகாண உளவளத் துணையாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்கென உளவளத் துணையாளர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது

(இ- 6)


எத்தகைய கல்வி மிகவிரைவில் முக்கியம் ஆகப்போகிறது என்பதனை அறிய எல்லா மாணவரும் பெற்றோரும் அவசியம் வாசிக்க வேண்டிய பிரசுரம்

சாமிஜி எழுதிய

**'இருபத்தியோராம் நூற்றாண்டு சவால்களைச் சந்திக்க'**

விலை ரூபா 15 00

பரணன் அசோசியேட்ஸ்,
138, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்.

(63356)


## இல்ல மெய்வல்லுநர் போட்டி

ஒத்தி வைக்கப்பட்ட எமது கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 24 - 02 - 99 பி. ப. 2-00 மணிக்கு நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(சி-6587)

## கண்ணீர் அஞ்சலி

### K. P. புலவர்

( புலவர் வீடியோ உரிமையாளர் )

பெயருக்கேற்ப சிறப்பம்சம் பொருந்திய புலவர் அவர்கள் உலகெலாம் பரந்து வாழும் தமிழ் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றவர். புலவர் அவர்களின் இடைவிடாத முயற்சியும் அமைதியும் சாந்தமும் இவரை இந்தளவு புகழ் நிலைக்கு வைத்தது.

வீடியோ படப்பிடிப்பில் புதிய பரிமாணங்களை உட்புகுத்தி தரை, கடல், ஆகாயம் போன்ற இடங்களிலெல்லாம் அவை நடந்தவாறு காட்டிய முன்னணி தொழில்நுட்பக் கலைஞராவார்.

அன்னாரின் மறைவினால் கலங்குகின்ற அன்னாரது குடும்பத்தினருக்கு இதய அஞ்சலி செலுத்தி எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஐ. ரவீந்திரன் குடும்பத்தினர்.
[செந்தூரன் அலங்கார பந்தல் சேவை]
'தில்லையம்பதி' கோண்டாவில்.

[ 63355 ]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
### சுப்பர் நாகமுத்து

கடந்த 25 – 01 – 99இல் கர்த்தருக்குள் மகிமை அடைந்த திருமதி சுப்பர் நாகமுத்து அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி ஆராதனைகள் 24–02-99 புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சு. கனகரத்தினம் (மகன், கனடா),
சௌந்தரம் பரஞ்சோதி (மகள்),
ஜெயமலர் (மருமகள், கனடா),
றொனால்டன் (பேரன், கனடா),
றென்பிறட் (பேரன், கனடா).

புனர் வாழ்வகம்,
அட்டகிரி,
நவாலி வடக்கு.

[63352]

## நீங்காத நினைவலையில் இரண்டாம் ஆண்டு

மலர்வு
09
—
05
—
1947



உதிர்வு
15
—
02
—
1997

### அமரர் V. T. பத்மநாதன்

[ பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை. ]

திதி: 24 – 02 – 1999

நீங்கள் மறைந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு நீங்கவில்லை.

மனைவி, மக்கள், சகோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்.

திருமதி சிவாஜினி பத்மநாதன்,
'' வியாளாவத்தை '',
நெல்லியடி,
கரவெட்டி.

(C/6575)

## பருத்தித்துறை பொதுசன நூலகப் பொன்விழா

மேற்படி விழாவினைச் சிறப்பான முறையில் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நடத்துவதற்கேதுவாக எனது தலைமையில் பருத்தித்துறை பொதுசன நூலகத்துக்கு வாசகர் வட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் பின்வருவோர் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 01. | திரு. ஆ. பசுபதி | — உதவித் தொழில் ஆணையாளர். |
| 02. | திரு. இ. உருத்திரா | — சட்டத்தரணி. |
| 03. | திரு. ந. சோமசுந்தரம் | — செயலாளர், நகரசபை, பருத்தித்துறை. |
| 04. | திருமதி எஸ். சுந்தரேசன் | — அதிபர். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை. |
| 05. | திரு. செ. அரியரட்ணம் | — தபாலதிபர், தபாலகம், பருத்தித்துறை. |
| 06. | திரு. செ. அருளம்பலம் | — நூலகர், பொதுசன நூலகம், பருத்தித்துறை. |
| 07. | திரு. நா. மணிவண்ணன் | — அங்கத்தவர், நகரசபை, பருத்தித்துறை. |
| 08. | திரு. அ. உதயசிறி | — வர்த்தக சங்கத் தலைவர், பருத்தித்துறை. |
| 09. | திரு. ஆ. செல்வநாயகம் | — ஈஸ்வரி நகையக உரிமையாளர், பருத்தித்துறை. |
| 10. | திரு. சி. தங்கவேலாயுதம் | — ஐக்கிய விளையாட்டுக் கழகச் செயலாளர், பருத்தித்துறை. |
| 11. | திரு. இ. கணேசமூர்த்தி | கராட்டி விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை. |
| 12. | திரு. எஸ். பி. விவேகானந்தன் | நாவலர் விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை. |

மேற்காட்டிய அங்கத்தவர்களிலிருந்து பொன்விழா மலர் வெளியீட்டுக் குழுவும் நிதிக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

இந்த விழாவைச் சிறப்பான முறையில் நடத்துவதற்காக எமது மலர் வெளியீட்டுக் குழுவினரால் பருத்தித்துறை நகரசபை, பொது நூல் நிலையம், பருத்தித்துறை நகரம் ஆகியவற்றின் அருமைகளையும் பெருமைகளையும் உள்ளடக்கிய பொன்விழா மலர் ஒன்றை வெளியீடு செய்ய உள்ளமையால் பருத்தித்துறை வாழ் மக்கள் மட்டுமன்றி அனைத்து ஆர்வலர்களும் அபிமானிகளும் தங்களால் இயன்ற பண உதவி மட்டுமன்றி மலர் வெளியீட்டில் உள்ளடக்கக்கூடிய பருத்தித்துறை நகருடன் தொடர்புடைய தகவல்களையும் வழங்கி எமது செயற்பாட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வ. விசயரட்னம்
தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 15–02–1999

(சி/6580)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 FEB 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

## ஒழியா அநீதி!

யாழ்ப்பாணத்து நுகர்வோர் முதுகில் எல்லோரும் சவாரி செய்கிறார்கள். யாழ்ப்பாண நுகர்வோருக்குப் பகுத்தறிவும் விழிப்புணர்வும் வருவதெப்போது? இந்த அநீதியான வர்த்தகம் ஒழிவது எப்போது?

இவ்வாறு கேள்விகளை எழுப்பியுள்ளது யாழ்ப்பாண நுகர்வோர் சங்கம்.

குடாநாட்டில் பதுக்கல், கள்ளச்சந்தை, விலையேற்றம், பொருள்களுக்குத் தட்டுப்பாடு உண்டாகுதல் என்பன சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையிலேயே சங்கத்தினர் இந்தக் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

குடாநாட்டு வர்த்தகத் துறையினர் வருடம் முழுவதிலும் மாறி மாறி ஏதோ சில பொருள்களுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை உண்டு பண்ணுவது; அது எவ்வாறு திட்டமிட்டுச் செயற்படுத்தப்படுகிறது; என்பது குறித்தும் அந்த அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டு வருவதில் ஒரு சில வர்த்தகர்கள் ஏகபோக உரிமை கொண்டாடுவது; செயலக அதிகாரிகள் மற்றும் படையினர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் நுகர்வோரை கைவிட்டுள்ள நிலைமை என்பனவற்றையும் சங்கம் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தி உள்ளது.

குடாநாட்டில் எதனை ஒழித்தாலும் அநீதியான வர்த்தகத்தை இல்லாமற் செய்வது கஷ்டம் என்றாகி விட்டது. வர்த்தகர்களும், அதிகாரிகளும் ஒரு தரப்பு அடுத்த தரப்பு மீது மாறி மாறிக் குற்றஞ்சாட்டிக் கொண்டு மக்கள் தலையில் குட்டுகிறார்கள்!

உதயன் — சஞ்சீவி பத்திரிகைகளில் செயற்கைத் தட்டுப்பாடு, கள்ளச்சந்தை, கொள்ளை இலாபம் ஆகிய சமூக விரோதச் செயல்களை அவ்வப்போது வெளிப்படுத்தியும் கண்டித்தும் வருகிறோம்.

ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் திருந்துவதாக இல்லை. மாறி மாறி ஒருவருக்கு மற்றவர் துணை போவதாகவே கொள்ள வேண்டி உள்ளது. அது மட்டுமன்றித் தாம் நியாயமாக நடந்து கொள்ளுவதாக ஒவ்வொரு தரப்பும் காட்டிக் கொள்கிறது. ஆனால் எவரது கையும் சுத்தமானதாக இல்லை என்றே மக்கள் — நுகர்வோர் — எண்ணுகிறார்கள்.

1990-க்குப்பிந்திய கடந்த 9 வருட காலத்தில், யாழ்ப்பாண நுகர்வோர் மீது சவாரி செய்து, அவர்களைக் கறந்து, பணம் தேடுவதே பல தரப்பாரினதும் நோக்கமாக இருந்து வருகிறது மனிதாபிமானம், நீதி, இறை தண்டனை என்ற வகையிலாவது இவர்கள் திருந்துவதாக இல்லை; திருந்தமாட்டார்கள்!

ஆகையால், குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருந்தது போதும் என்று நுகர்வோர் பொங்கி எழுந்தால் அன்றி நேர்மையான, நீதியான, நியாயமான வர்த்தகம் இங்கு தலையெடுக்காது. இதற்கான விழிப்புணர்வை உண்டாக்கும் பெரும் பொறுப்பு நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்திற்கும் உண்டு.

# வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் வசதிகள் இல்லை; மாணவர் பாதிப்பு!

## படிப்பை இடையில் கைவிட்டு தொழில் நாடும் இளைஞர் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் அபிவிருத்தி வேலைகளும், புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளும் மிகவும் துரித கதியில் மேற்கொள்ளப்படுகின்றன எனப் பரவலாகப் பேசிக் கொள்பவர்கள் அனைவரும் ஒரு முறை வடமராட்சி கிழக்குக்கு வாருங்கள்.

கட்டடத்தின் மேல் கட்டடம் கட்டி, சுற்றுமதில் கட்டுவதில் யாழ். நகரப் பாடசாலைகள் ஆர்வம் காட்டிவர, சொட்டுப் போடும் மழைத் துளியிலும், சுட்டெரிக்கும் வெயிலிலும் கல்வி கற்கும் பரிதாப நிலையில் உள்ள வடமராட்சி கிழக்கு மாணவர்களை வந்து பாருங்கள்.

அரச அதிகாரிகள் முதல் அரசியல் தலைவர்கள் வரை தமது பெயர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையிலும், தமக்கு பிரபல்யத்தை ஏற்படுத்தும் வகையிலும் பிரபல்யமான முன்னேறிய, நகரப் பாடசாலைகளுக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர்.

ஆனால் ஒதுக்குப் புறத்தில் இருப்பதாகக் கருதிக் கொண்டு அவர்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைக் கூரைகளை வேய்வதற்கு தேவைப்படும் கிடுகுகளைக் கூட வாங்கிக் கொடுக்க மறக்கின்ற நிலையில் உள்ளார்கள் என்பது தான் மனவருத்தம் தரும் விடயமாக உள்ளது.

வடமராட்சி கிழக்கில் மணற்காட்டில் இருந்து மருதங்கேணி வரையுள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளே தமது சொந்த இடங்

### செய்தி மடல்

களில் இயங்குகின்றன. உடுத்துறை முதல் கட்டைக்காடு வரையிலான பகுதிகளில் உள்ள பாடசாலைகள் யாவும் அண்மைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து மருதங்கேணி மற்றும் செம்பியன்பற்றுப் பகுதிகளில் இயங்குகின்றன.

**அடிப்படை வசதிகள் இல்லை**

இவ்வாறு இடம்பெயர்ந்த நிலையில் இயங்கும் பாடசாலைகள் மட்டுமன்றி சொந்த இடங்களில் இயங்கும் பாடசாலைகள் கூட எந்த வகையான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையிலேயே இயங்குகின்றன,

சொந்த இடங்களில் இயங்கும் பாடசாலைகளிலும், இடம்பெயர்ந்த நிலையில் இயங்கும் பாடசாலைகளிலும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட — கிடுகுகளால் வேயப்பட்ட — வகுப்பறைகளில் இருந்தே மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இவ்வாறு தற்காலிகமாக அமைக்கப்பட்ட வகுப்பறைகளின் கூரைகள் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதனால் கடந்த வருட இறுதியில் பெய்த கடும் மழையின் போது மேற்படி வகுப்பறைகளில் இருந்து கல்விகற்ற மாணவர்களும் மற்றும் கற்பித்த ஆசிரியர்களும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியதைக் காணமுடிந்தது.

வடமராட்சி கிழக்கில் உள்ள இத்தகைய பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல அவற்றுள் தளபாடப் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை, கற்றல், கற்பித்தலுக்கான உபகரணப்பற்றாக்குறை என்பன பிரதானமானவை.

ஆசிரியர் பற்றாக்குறையை எடுத்துக் கொண்டால் பொதுவாகவே சகல பாடங்களுக்கும் போதிய ஆசிரியர்கள் இல்லை. இரண்டாயிரமாம் ஆண்டில் நாடு முழுவதிலும் ஆங்கிலக்கல்வி முழுமையடையும் என அரசாங்கம் பலமுறை வானொலி மூலமும், பத்திரிகைகள் மூலமும் அறிவித்து வருகிறது. இதேவேளை வடமராட்சி கிழக்கில் உள்ள 80 சதவீதமான பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லை. இதனால் இப்பகுதி மாணவர்கள் ஆங்கிலக்கல்வியைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

இதேவேளை கடந்த வருட ஆரம்பத்திலும், சமீபத்திய காலங்களிலும் வழங்கப்பட்ட பட்டதாரிப்பயிலுநர் மற்றும் தமிழ்மொழி மூலமான தகுதிகாண் பயிலுநர் ஆசிரிய நியமனங்களின்போது, குறைந்த எண்ணிக்கையினரே வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் பெரும்பாலானோர் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தியும், அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியும் வடமராட்சி நகரப்பகுதிப் பாடசாலைகளுக்கும், தமது வீடுகளுக்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்கும் இடமாற்றம் பெற்று சென்றுவிட்டனர். இன்னுஞ் சிலர் வடமராட்சி கிழக்கின் முற்பகுதியில் உள்ள மணற்காடுப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

சொந்த மண்ணில், சொந்த மக்களுக்காக இறை சேவையாம் கல்விச் சேவையை வழங்க முடியாதவர்கள் எவ்வாறு விழிப்புடைய சமுதாயம் ஒன்றை இந்த மண்ணில் உருவாக்கப் போகின்றார்கள்.

இத்தகைய கஷ்டப் பிரதேசங்களை "அவமதிக்கும்" தன்மை மாறவேண்டுமானால் ஆசிரிய நியமனம் பெறும் புது முகங்களை முதலில் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டும். இவ்வாறு கஷ்டப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கான போக்குவரத்து, இருப்பிட வசதிகள் சம்பந்தப்பட்ட கல்வி வலயங்கள் செய்து கொடுக்க வேண்டும். இல்லையேல் தமது பாவனைக்குப் பயன்படுத்தும் புதிய ரக ஓட்டோ மற்றும் ஹைஏஸ் வான்களை ஆசிரியர்களின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்த வேண்டும்.

வடமராட்சி கிழக்கு மக்கள் தற்போது எதிர்பார்ப்பது யாதெனில் தங்களுக்குரிய வலயக் கல்வித் திணைக்களம் வடமராட்சி நகரப் பகுதியில் எங்கு இயங்கினாலும் பரவாயில்லை. தமது பகுதிக் கல்வி வளர்ச்சியில் கல்வி அதிகாரிகள் பொறுப்புடன் கூடிய தமது கடமையை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

**மாணவரிடம் பணவசதி இல்லை**

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் பாடசாலைக் கல்விக்கு மேலும் உதவி செய்யும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் கல்விப் பணியாற்றி வருகின்றன.

வே. தவச்செல்வம்
செம்பியன்பற்றுச் செய்தியாளர்

இத்தகைய நிலைமைகளை நாம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் காணமுடியாது. தனியார் கல்வி நிறுவனங்களும் இல்லை. அவற்றுக்குச் சென்று கல்வி கற்கக்கூடிய பொருளாதார வசதிகளும் இங்குள்ள மாணவர்களிடம் இல்லை.

பாடசாலைகளில் போதிய வசதிகள் இல்லாமை காரணமாக இப்பகுதி மாணவர்கள் பலரும் படிக்க வேண்டிய வயதில் விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றில் ஈடுபடும் நிலைமையைக் காணமுடிகிறது. அதாவது அடிப்படைக் கல்வியைக் கூட கற்றுக் கொள்ள முடியாத ஓர் அபாயகரமான நிலைமையே இங்கு உருவாகியுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள இரண்டு பாடசாலைகளில் மட்டுமே அதாவது உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சீ.சீ.த. கலவன் வித்தியாலயம் ஆகியவற்றிலேயே ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்கள் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த வகுப்புக்களில் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லையென்றே கூறவேண்டும்.

அதேவேளை உடுத்துறைப் பகுதியில் இருந்து மணற்காடு பகுதிவரையிலான நீண்ட பிரதேசத்தில் உள்ள எந்தப் பாடசாலையிலும் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புக்கள் இல்லை. இதனால் பலத்த சிரமங்களின் மத்தியிலும் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடையும் இப் பகுதி மாணவர்கள் பருத்தித்துறை பளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

இதேவேளை, தரம் உயர்த்தப்பட வேண்டிய பாடசாலைகள் பல தரம் குறைக்கப்பட்டு அத்தகைய பாடசாலைகளில் குறிப்பிட்ட வகுப்புக்கு மேல் போதிக்க முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக மாமுனை அ.த. கலவன் வித்தியாலயத்தில் ஆண்டு ஒன்பது வரை வகுப்புக்கள் இதுவரை நடத்தப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது அந்தப் பாடசாலையில் ஆண்டு 6 வரையிலான வகுப்புகளே நடத்தப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளதால் இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் அனைவரும் சுமார் ஒருமணி நேரம் நடந்து செம்பியன்பற்று அ.த.க பாடசாலையில் கல்விகற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலப் போர்க் கொடுமைகளுக்கு வடமராட்சி கிழக்கு மாணவர்களும் விதிவிலக்கல்ல வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் மகாவித்தியாலய மாணவர்கள் அதற்கு ஓர் உதாரணம்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்மேற்படி பாடசாலை மீது நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலினால் 20 மாணவர்கள் துடிதுடித்துப் பலியாகியமையும், 38 மாணவர்கள் படுகாயமடைந்தமையும் தெரிந்ததே.

மேற்படி சம்பவத்தின் போது காயமடைந்த மாணவர்கள் பலரும் பலத்த கஷ்டங்களின் மத்தியிலேயே தமது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய பல்வேறு நெருக்கடிகள் நிலவும் இப்பகுதியில் சில மதசார்பான நிறுவனங்களும் சில பொது நிறுவனங்களும் ஆற்றி வரும் ஓரளவான சேவைகளையும் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. மாலை நேர வகுப்புக்கள் நடத்துதல், பாலர் பாடசாலைகளை நிறுவுதல் மற்றும் சிறுவர் போஷாக்கு திட்டங்களை நடத்துதல் என்பன அவற்றுள் அடங்கும்.

*

### நாளை

மாசி 13

**வியாழக்கிழமை**

திதி: தசமி
பிற்பகல் 5.26 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முற்பகல்: 7.14 வரை.
திருவாதிரை
காலை 6.06 வரை
சுபநேரம்: 8.00-9.30
ராகுகாலம்: 2.00-3.30
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

என் நண்பனுக்கு நான் தேவைப்படும் போது, அவனை உதறித் தள்ளும் தன்மை எனக்கில்லை.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

### தவக்காலச் சிந்தனை – 8

நவீன உலகம், நவநாகரிகம், தொழில் நுட்ப முன்னேற்றம் என்ற ஏணிப்படிகள் மூலமாக மக்கள் உயர் நிலைப் பிரவேசம் செய்கின்றார்கள். பிழை காண்பதிலும், குற்றம் சுமத்துவதிலும் கூட கணனி முறைகளையே பயன்படுத்துகின்றார்கள். மன நிறைவையும், மகிழ்வையும் கடையில் வாங்க நினைக்கின்றார்கள். நிழல்களையெல்லாம் நிஜங்களாக்க முனைகின்றார்கள் இப்படியானவர்களைத் "தீய தலைமுறையினர், அடையாளம் கேட்பவர்" என்று இயேசு எச்சரிக்கின்றார்.

மனித நேயம் மிதிபடுகின்ற சமுதாயத்தில் புனிதத்துவ வாழ்வும் வாழ வேண்டிய கடப்பாடும் எமக்கு உண்டு. நான் செய்யும் நன்மை நால்வரைச் சேரும். நாளைய சமுதாயத்தை வளம்படுத்தும் என்று எண்ணிச் செயற்பட்டால் நல்லவை மலராமல் போகாது. தீயவை அழியாமல் போகாது. தீமை செய்யாமல் இருக்க முற்படுவோம். நன்மைகள் தானாக வரும். முதலில் நாமே செயல்படுவோம். தீயவை வழிவிடும் மெல்ல நன்மையின் சூரியன் எழுவான்.

— அன்ரனி பீற்றர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தூதரகத்தின் நிதி உதவியுடன்
# 108 அபிவிருத்தித் திட்டங்கள்
## கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்டன

யாழ்ப்பாணம், பெப். 24
அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நிதியுதவியுடன் கடந்த வருடம் குடா நாட்டில் 108 அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். செயலகத்தில் உள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் குடாநாட்டின்அபிவிருத்தித் திட்டங்களுக்கென அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் 7 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது.

இந்த நிதியைப் பயன்படுத்தி 115 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவென நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. எனினும் 108 திட்டங்களே கடந்த வருட இறுதிவரை மேற்கொள்ளப்பட்டன.

நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் உள்ள 7 திட்டங்களையும் இந்த வருடம் செயற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுள் வீதித்திருத்தம் மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுத்தல், சுகாதார வைத்திய வசதிகளை ஏற்படுத்தல், பாடசாலைகள் புனரமைப்பு, கமத் தொழிலாளர் ஊக்குவிப்புத் திட்டங்கள் என்பன குறிப்பிடத் தக்கன. (இ-7)

## கண்ணீர் அஞ்சலி



### பொன்னர் புலவர்

வெகுதானிய வாண்டு மாசி மாத ஏழில்
மிகுமபர துதியை நாளதனில் —புகழார்ந்த
புலவனெனுந் தூயோன் பரமன் தாளதனை
நாடினா ரென்றே கூறு.

மேதினியில் தீதிலாத நிறைகுணத்தோன்
சிறந்த நீதிமிக்கோன் பலரும் வாழ
வழிகளைக் காண்பித்தோன் அல்லற்
பட்டோருக்கு அரும் உதவியாற்றியவன்.

அன்னாருக்கு எமது இதய அஞ்சலி!

வர்த்தக நிலையங்கள்,
டிப்போ சந்தி,
கோண்டாவில்.
(63370)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### தங்கம்மா செல்லையா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15—01—1912 | 26—01—1999 |

அன்புச் சுடரே!
குடும்பத்தின் ஒளி விளக்கே!
பாசத்தின் உறைவிடமே!
எம்மை வழி நடத்திய அன்புத் தெய்வமே!

இதனை உங்கள் ஆத்ம சாந்திக்கு
சமர்ப்பணம் செய்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
த. கரன் (பேரன்),
டச்சு வீதி,
உடுவில்.
(63361)

## 'அன்ரனா' கட்ட ஏறியவர் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், பெப். 24
அன்ரனர கட்டுவதற்காக மாமரத்தில் ஏறியவர், கொப்பு முறிந்ததால் கீழே விழுந்து கால் முறிந்து காயமடைந்தார்.

அல்வாயில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரகுநாதன் ரவீந்திரன் (வயது 31) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

## சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கக் கிளை

சண்டிலிப்பாய், பெப். 24
யாழ். சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் மானிப்பாயில் கிளை நிலையம் ஒன்றை விரைவில் திறக்கவுள்ளது.

சங்கம் உற்பத்தி செய்யும் சித்த ஆயுர்வேத மருந்துகள் இந்த கிளை மூலம் விநியோகம் செய்யப்படுமென்று சங்க தலைவர் நா. கணேசன் தெரிவித்தார். இ-135

## கோப்பாயில் 5 முன்பள்ளிகள் புனரமைப்பு

வலி.கிழக்கு, பெப். 24
சர்வோதய சிரமதான சங்கம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 5 கிராமங்களில் உள்ள சனசமூக நிலையங்களில் இயங்கும் பாலர் முன்பள்ளிகளைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த அடிப்படையில் ஊரெழு வளர்பிறை, ஆவரங்கால் லிங்கன் ஆகிய பாலர் முன்பள்ளிகளின் கட்டட புனரமைப்பு வேலைகள் முடிவுற்று வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை உரும்பிராய் நவசக்தி, நீர்வேலி காமாட்சி ஆகிய முன்பள்ளிகளின் கட்டடவேலைகள் இடம்பெற்று வருகின்றன.

சிறுப்பிட்டி அண்ணா பாலர் முன்பள்ளியிலும் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

[illegible] ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன எனக் கூறப்படுகின்றது. (இ-108)

## பிரதேச செயலகம்
கரவெட்டி
## மெய்வன்மைப் போட்டி – 1999

காலம்:- 1999 - 02 - 24 புதன் பிற்பகல் 2-00 மணி

மைதானம்:- யா/ நெல்லியடி
மத்திய மகாவித்தியாலயம்

தலைவர்:- திரு. செ. ஸ்ரீநிவாஸன்
(பிரதேச செயலர் – கரவெட்டி)

முதன்மை விருந்தினர்
உயர்திரு து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர் - யாழ். மாவட்டம்)

♣ 1999—02—21 ஆம் திகதி காலநிலை சீரின்மையால் ஒத்தி வைக்கப்பட்ட போட்டி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதேச செயலர்
விளையாட்டுக் குழுவினர்.

பிரதேச செயலகம்
கரவெட்டி.
(சி-6591)

## பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்
## எழுதுவினைஞர் தேவை

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் பணிமனையில் கடமையாற்ற எழுதுவினைஞர் தேவை. ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளை எழுத வாசிக்கத் தெரிந்தவரும் உதைபந்தாட்ட நிர்வாகம் தொடர்பான அறிவு பெற்றவரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். இளைப்பாறிய உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 28—02—1999

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் செயலாளர், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், பிரதேச செயலகம், கரவெட்டி என முகவரியிட்டு அனுப்பவும்.

செயலாளர்,
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்
(சி/6590)

## இந்து சமயப் பேரவை
யாழ்ப்பாணம்
தாய், தந்தையரை இழந்த மாணவர்களுக்கான
## முக்கிய அறிவித்தல்

(1) கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் அனுமதி பெற்று கல்வி கற்க விரும்பும் 06 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட தாய், தந்தையரை இழந்த வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பிள்ளைகள் இரு பாலாரும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(2) பல்கலைக்கழக அனுமதி பெற்று கல்வியைத் தொடரும் தாய், தந்தையர் இருவரையும் இழந்து வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதால் அவர்களும் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பத்தில் பின்வரும் விரவங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(1) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் —
(2) பிறந்த திகதி —
(3) முழுமையான தபால் விலாசம் —
(4) தந்தை இறந்த திகதி —
(5) தாய் இறந்த திகதி —
(6) பாதுகாவலர் பெயர் —
(7) கல்வி கற்கும் வகுப்பும் பாடசாலையும் / பல்கலைக்கழகத்தின் பெயர் —

இந்த விவரங்கள் விண்ணப்பதாரர் நிரந்தரமாக வசிக்கும் பகுதிக் கிராம அலுவலராலும், பிரதேச செயலரினாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி — 15. 03. 1999

அனுப்ப வேண்டிய முகவரி;—
கௌரவ செயலாளர்,
இந்துசமயப் பேரவை,
375, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இந்துசமயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

★ இப்பணிக்கு உதவ விரும்பும் தாராள உள்ளம் படைத்தவர்கள் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| அருட்கவி. சீ. விநாசித்தம்பி | சி. சக்திகிரீவன் |
|---|---|
| தலைவர் | கௌரவ செயலாளர் |

(63363)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 FEB 1999

# கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்

## யாழ். பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிறு (28 - 02 - 99) காலை 7 மணிக்குத் திருப்பலியைத் தொடர்ந்து, நல்லாயன் நடுநிலையத்தில் நடைபெறும். அனைத்து உறுப்பினரும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்கின்றோம்.

- செயலாளர்

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(63379)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

## இணுவில் மத்திய கல்லூரி

ஆரம்பப்பிரிவு வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் துரை. எங்கரசு தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக இணுவை கனகதயாபரன் களஞ்சிய உரிமையாளரான கனக தயாபரனும், அவரது பாரியாரான க. உதயசோதியும், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயம் திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் வை. சச்சிதானந்தனும், சிறப்பு விருந்தினர்களாகக் கிராம சேவையாளர்கள் தி. புரந்திரதாசனும், க. இரவீந்திரனும் கலந்து கொள்வார்கள்.

நலன் விரும்பிகள்

(63387)

# இதய அஞ்சலி

கோண்டாவில் வடக்கு
பிரபல வீடியோ உரிமையாளர்

## அமரர் K.P. புலவர்

அவர்களின்

திடீர் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது இதய பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தில்லையம்பதி பரிபாலன சபையினர்,
மத்திய கிராம முன்னேற்றச் சங்க நிர்வாக சபையினர்,
மத்திய விளையாட்டுக் கழகத்தினர்.

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (63389)

# இதய அஞ்சலி

## பொன்னர் புலவர்

[புலவர் வீடியோ உரிமையாளர்]

கலைவளம் மிக்கவன், கற்றவர் நல்லவர், பணியில் வல்லவர் என்றறிந்து ஐயா நின்னிடம் நாடிவந்து பெற்றேன் தொழிற் பயிற்சி. இற்றைநாள் யான் வளமுடன் திகழ துணையாய் நின்ற நல்லாசான் நீரன்றோ. தாங்குவோமா உம்பிரிவு. எண்ணும்போது எம்மாந்தர் வியப்புற மண்ணில் மாசேவை செய்து விண்ணுலகு போற்றிட விமலனடி சேர்ந்த புலவர் உங்கள் புனித நல் ஆத்மா சாந்தியடைவதாக.

ச. பாலசுப்பிரமணியம் (பாலா)
குடும்பத்தினர்

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (63384)

# இதய பூர்வ நன்றிகள்

18 ஆம் திகதி வியாழக்கிழமை நடந்த எமது புத்திரர்களின் உபநயனத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும், இந்த உபநயனத்தை நடத்தி வைத்த

தீட்ஷா குரு
பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்களுக்கும்

இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த சகல அந்தணப் பெருந் தகைகளுக்கும், மங்கள இசை பொழிந்த சகல வித்துவான்களுக்கும், அன்பளிப்பு வழங்கிய பெருந் தகைகளுக்கும், பத்திரிகை மூலம் வாழ்த்துக்கள் தெரிவித்தவர்களுக்கும், இந்த வைபவத்தைச் சிறப்பித்து எல்லா வழிகளிலும் உதவிய அனைவருக்கும், பந்தல் அலங்காரம் செய்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, எல்லாம் வல்ல மகாகணபதிப் பிள்ளையார், இராஜ இராஜேஸ்வரிதேவியின் அருள் கடாட்சம் கிடைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

நன்றிகள்!

இங்ஙனம்
ச. சிறீ[illegible]

கோண்டாவில் மேற்கு.

(63372)

# விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 24

வண்ணார் பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் பிற்பகல் 1-30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் மு. செல்லையா தலைமையில் இடம் பெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், மேற்படி வித்தியாலய முன்னாள் அதிபர் கா, கணேசதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (7-51)

★ ★ ★

குருநகர், பெப். 24

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு அதிபர் க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. தீவக கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எம். எஸ். ஏ, ஒஸ்வேல்ட் பிரதம விருந்தினராக இதில் கலந்து கொள்ள உள்ளார். (51)

# ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், பெப். 24

திருநெல்வேலி கிழக்கு முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலைய 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கரம், கரப்பந்தாட்டம் ஆகியவை போட்டிகளில் இடம் பெறும், (இ-15)

# நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 23

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் விளையாட்டு அதிகாரி பதவிக்கு ஆள் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றன.

இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் இன்று காலை 9.30 மணிக்கு அதற்குத் தோற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

★ ★ ★

பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்காக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் யாழ். செயலகத்தில் இடம்பெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையை நடத்தவென உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

தேசிய வரவு—செலவுத்திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளே இவ்வாறு வரவுள்ளனர்.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு குடாநாட்டில் இருந்து விண்ணப்பித்த சுமார் 850 பட்டதாரிகள் தோற்றவுள்ளனர். (உ-7)

# குழாய்க் கிணறு திருத்தப்படவில்லை

கோப்பாய், பெப். 24

கோப்பாய் சுகாதார வைத்தியசாலையில் அமைந்துள்ள குழாய்க்கிணறு திருத்தப்படாமையால் நோயாளர் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தக் கிணறு திருத்தப்படாமையால் இந்த வைத்தியசாலைக்கு மருந்து பெறவரும் நோயாளர் அருகில் உள்ள குடியிருப்பாளர்களிடமே தண்ணீர் பெற வேண்டியுள்ளது. இந்த வைத்தியசாலையுடன் இணைந்து [illegible] [illegible] குறிப்பிடத்தக்கதாகும். (இ-72)

# விசேட அடையாள அட்டை விநியோகம்

குருநகர், பெப். 24

றெக்கிளமேசன் கிழக்கு (ஜே 68), ஈச்சமோட்டை (ஜே.66) ஆகிய கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்குரிய விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் சின்னக்கடை இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படும் என்று அந்தப் பிரிவுகளின் கிராம சேவையாளர் சி. க. பாலசிங்கம் அறிவித்துள்ளார். (உ-3)

# யாழ். மாவட்டத்திற்குப் பொருள்களைக் கப்பலில் அனுப்புவோர் கவனத்திற்கு

1. கொழும்பில் கப்பலில் பொருள்களை ஏற்றியதும், அதற்குரிய B/L FINAL பிரதியை உடனடியாக யாழ். செயலக புனர்வாழ்வுக்கிளையில் சமர்ப்பிக்கவேண்டும்.
2. பொதிகள் இங்குவந்து சேருமளவும் சேதம் ஏற்படாதவாறு நன்றாகப் பொதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு பொதியிலும் தெளிவாக அடையாளமிடப்படல் வேண்டும்.
4. **பெறுமதிமிக்க பொருள்கள் கப்பல் தலைமை அதிகாரியிடம் கையளிக்கப்பட்டிருப்பதுடன், பொருள்களைக் கையளித்ததற்கான பத்திரத்தின் பிரதியையும் யாழ். செயலக புனர்வாழ்வுப்பகுதியில் சமர்ப்பித்தல் வேண்டும், (இவ்விதிப்படி கப்பலில் இதனைச் சமர்ப்பித்தால், அதன்படி கப்பல் தலைமை அதிகாரியிடம் பொருள்களைக் கேட்டுப் பெற முடியும்)**
5. பொருள்களை ஏற்றும்போது பொருள்களைக் கலந்து ஏற்றாது B/L ஒழுங்கின்படி ஏற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை ஓரளவுக்காவது மேற்கொள்ள வேண்டும்.
6. பொதிகள், பொருள்களை இலகுவாக அடையாளங்காண ஏதுவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை பொருள்களைத் தருவிப்போர் அனைவரும் கடைப்பிடித்தால், பொருள்களை சேதமில்லாது கையளிக்க இலகுவாக இருக்கும் என்பதைத், தெரிவித்துக்கொள்கின்றேன்.

- அரச அதிபர்

யாழ். செயலகம்.
22-02-1999. (சி/6595)

# எழுதுவினைஞர் பரீட்சைக்கான விசேட வகுப்புகள்

நடைபெறும் இடங்கள்:

| | | |
|---|---|---|
| D.Mi | யாழ்ப்பாணம் | வெள்ளி 12.00 மணி |
| ஞானோதயா | சாவகச்சேரி | புதன் 12.00 மணி |
| சுப்றா | சித்தன்கேணி | வியாழன் 12.30 மணி |
| சித்திவிநாயகர் | மல்லாகம் | திங்கள் 1.00 மணி |

★ இப் பரீட்சைக்கான வினாத்தாள் தொகுப்பு இந்த நிலையங்களில் விற்பனைக்குண்டு.

— உங்கள் ஆசிரியர்

(சி/6597)

# இதய அஞ்சலி

முன்னாள் முகாமையாளர்
மக்கள் வங்கி, நெல்லியடி

அமரர்

## வி. டபிள்யூ. சிதம்பரப்பிள்ளை

அவர்கள் தேவனுடன் ஐக்கியமாகிவிட்டார். அன்னாரது குடும்பத்துக்கு அனுதாபத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றோம்.

ப. நோ. கூ. சங்கம்
கட்டைவேலி-நெல்லியடி

(சி/6593)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. விஜயசுந்தரம்
அவர்களின் அன்புத் தந்தையார்

## சின்னையா நல்லையா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

கொக்குவில். (சி/6601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

20) என்பவர் கடந்த மாத 24 ஆம் திகதி வானில் வந்த புளொட் அமைப்பினரால் கடத்தப்பட்டார். பின்னர் அவரது உறவினர்கள் அந்த அமைப்பினரிடம் சென்று விசாரித்தபோது பிரஸ்தாப நபர் தம்மிடம் இல்லை எனப் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

★ கடந்த 6 ஆம் திகதி மன்னாரில் இருந்து வவுனியாவுக்கு வந்த சமயம் ஜெயா என அழைக்கப்படும் ஆறுமுகம் பக்கிரி என்னும் தச்சுத் தொழிலாளியும் வேறு இரு ஆண்களும் புளொட் அமைப்பால் கைது செய்யப்பட்டனர். அதன் பின் அவர்களது உறவினர்கள் அந்த அமைப்பின் முகாமில் விசாரித்த சமயம் புலி ஆதரவாளராகச் சந்தேகித்துத் தாங்கள் கைது செய்ததாகக் கூறப்பட்டது. தற்சமயம் அவர்களைப் பற்றி தெரியாது என்று அந்த அமைப்புக் கூறுகின்றது.

இந்த விடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

### மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்)

என்பவர் மரணமானது தெரிந்ததே.

இந்தப் பெண்ணின் மரணம் தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் விசாரணை நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

இறந்தவரின் மகளான திருமதி ரவிச்சந்திரன் உதயசாந்தி, சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. வே. சிறி இராஜேஸ்வரன் ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

வைத்தியசாலையில் பணிபுரியும் நான்கு டாக்டர்களும் நான்கு தாதிகளும் விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களை மறு தவணையில் சாட்சியமளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அடுத்தமாதம் 2 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

(உ-3-5-15-139)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

வது ஆட்டம் கடந்த வாரம் கல்கத்தாவில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடந்தது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் இன்று கொழும்பில் இடம்பெறுகின்றது.

இந்த ஆட்டத்தில் பங்குபற்ற இந்திய அணியினர் நேற்று முன்தினம் இரவு கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இன்று ஆட்டம் நடைபெறவிருக்கும் எஸ். எஸ். ஸி மைதானத்தைச் சுற்றி பொலீஸார் பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அந்த மைதானத்துக்கு அருகில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப் படையினர் தடை விதித்துள்ளனர்.

கொழும்பு நகரிலும் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (உ-3-6)

### கரவெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்ற இவரை காணவில்லை என்று அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளதாகவும் —

இவர் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

[உ-5-15-173]

### படையினரை...

(இரண்டாம் பக்கத் தொடர்)

வான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரஸ்தாப குடும்பஸ்தரின் மரணம் தொடர்பாக பிரேத பரிசோதனை நடத்திய யாழ். மேலதிக சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம். ராம் மனோகர் வைத்திய அறிக்கையை நீதிவானிடம் சமர்ப்பித்தபோதே நீதிவான் மேற்கண்ட உத்தரவை விடுத்தார்.

குண்டு வெடிப்பு, துப்பாக்கிச்சூடு ஆகியவற்றினால் உடலின் பல உறுப்புக்களில் ஏற்பட்ட சேதம் காரணமாக மரணம் சம்பவித்ததாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-3-5)

### நகரில் காணப்...

[முதலாம் பக்கத் தொடர்]

உத்தரவிட்டார்.

அடையாளம் காணும் பொருட்டு தலை யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தலைக்குரிய நபர் 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்கக் கூடும் என்றும் —

மீசை இருந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி எஸ். சிறிதரன் சம்பவ இடத்துக்குச் சென்று தலையைப் பார்வையிட்டார்.

யாழ். நகரப்பகுதியில் இம்மாதம் இடம் பெற்ற இரண்டாவது மர்மக் கொலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கடந்த 3 ஆம் திகதி கழுத்துநெரித்துக்கொல்லப்பட்டு யாழ். கன்னாதிட்டி வீதியில், கட்டைப்பிராயைச் சேர்ந்த செல்லத்துரை புவிச்சந்திரன் என்பவரின் சடலம் வீசப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அந்தக் கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட முன்னரே மீண்டும் ஒரு கொலையினால் நகரப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இரண்டு கொலைகளும் ஒரே தமிழ்க் குழுவால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்ற கருத்தே மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது.

(உ-3-5-15-17-36-139-173)

### நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தார்.

இந்த நியமனம் தமது கட்சியுடன் ஆலோசனை நடத்தாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்—

இந்த நியமனத்தைத் தாங்கள் நிராகரிப்பதாகவும்—

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்ததும் ஐ. தே. கவினர் சபையில் கூச்சல் போட்டு உரையாற்றினர்.

நிலைமையைக் கட்டுபடுத்த முடியாத நிலையில் சபை நடவடிக்கைகளை சபாநாயகர் இன்று காலை 9. 30 வரை ஒத்திவைதைத்தார்.

(உ-3-6)

## ஆயுர்வேத

# மருத்துவஅதிகாரிபதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 24

ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் பதவியின் ஆரம்பப் பிரிவுக்கு புதியவர்களை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைச் சுகாதார, சுதேச மருத்துவ அமைச்சு கோரியுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி அடுத்த மாதம் முதலாம் திகதி ஆகும்.

மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான சகல விவரங்களும் கடந்த 12 ஆம் திகதி அரச வர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

வர்த்தமானியின் பிரதியை உதயன் அலுவலகத்தில் — அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (இ-7)

# 5 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் விடுவிப்பு

கொழும்பு, பெப். 24

இந்தியக் கடற்பரப்பில் மீன் பிடித்த குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டு மங்களூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சென்ற வருடம் ஒகஸ்ட் மாதம் ஆறாம் திகதி 'தினேஸ் புத்தா' என்ற இழுவைப் படகில் அவர்கள் மீன் பிடிக்கச் சென்றிருந்தார்கள். இவர்கள் அப்பாவி மீனவர்கள் என்று தேசிய ஒத்துழைப்பு மீன்பிடிக் குழு மங்களூர்ச் சிறைச்சாலைக்கு அறிவித்ததை அடுத்து இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த மீனவர்கள் இந்தியாவில் பழுதடைந்த நிலையில் கட்டப்பட்டிருக்கும் தமது படகினை தற்போது திருத்திக் கொண்டிருக்கின்றார்கள் எனவும்—

வெள்ளிக்கிழமை அவர்கள் நாடு திரும்புவார்கள் எனவும் — கூறப்பட்டது. (உ-6)

# 5 புளொட் உறுப்பினரும் தொடர்ந்து காவலில்!

வவுனியா, பெப். 24

வவுனியா குருமன் காட்டுச் சந்தியில் கடந்த 8 ஆம் திகதி ரெலோ உறுப்பினர் மூவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் ஐவரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு வவுனியா ...தில் நீதிவான் புண்ணியமூர்த்தி உத்தரவிட்டார்.

இவர்கள் நேற்று அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டு நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்டதாக கூறப்படும் தடயப் பொருள்கள் தொடர்பான பகுப்பாய்வறிக்கை கிடைக்கவில்லை என்று பொலீஸார் தெரிவித்ததையடுத்து நாளை வரை விசாரணையை நீதிவான் ஒத்திவைத்தார்.

(உ-3-164)

## பண்டத்தரிப்பில் தேடுதல்

யாழ்ப்பாணம், பெப். 24

பண்டத்தரிப்புபகுதிநேற்று அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றது.

அப்பகுதியில் இருந்து அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள்மட்டும்வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர். (உ-3-139)

### தேசிய அடையாள...

[முதலாம் பக்கத் தொடர்]

யாழ். குடாநாட்டில் வசிக்கும் மக்கள் விமானம் அல்லது கப்பல் மூலமாகப் பயணம் செய்வதற்கு பயண அனுமதி கோரி விண்ணப்பிக்கும் போது தேசிய அடையாள அட்டையை கட்டாயம் சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறு தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் நபர்களுக்கு பயண அனுமதி வழங்கப்படமாட்டாது — என்றுள்ளது.

(உ-3)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டதாகவும்—

அவை ஜனாதிபதியின் கவனத்துக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் —

மற்றொரு தகவல் தெரிவித்தது [உ-3]

## வவுனியாவில் கொள்ளை!

வவுனியா, பெப். 24

வவுனியா வேப்பங்குளம் ஆறாம் ஒழுங்கைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கேட்ட துப்பாக்கிச் சத்தங்களால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

அப்பகுதியில் உள்ள மில் ஒன்றில் இருந்து பொருள்களைக் கொள்ளையடிக்கச் சென்றவர்கள் ஆகாயத்தை நோக்கித் தீர்த்த வேட்டுச் சத்தங்களே அவை எனப் பின்னர் தெரியவந்தது.

[உ-3-164]

## கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

திணைக்களத் தலைவர்கள் பிரதேச செயலர்கள் இதில் பங்குபற்றுவர். (உ-3-180)


வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## உரிமக்கட்டண அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வியாபார / தொழில் ஸ்தாபனங்களுக்கான உரிமக்கட்டணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, 1999 ஆம் ஆண்டிலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகிறேன். இது பற்றிய மேலதிக விவரங்களை பெறவிரும்பின் காரியாலய நோத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

தி. மா. செல்வராசா
ஜே. பி. யு. எம்.
தலைவர்
வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிதெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
23 – 02 – 1999 (சி/6594)

## 4000 பட்டதாரிகள் தெரிவு விருபட்டவர்கள் விவரம் சேகரித்தல்

1996, 1997 இல் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பித்து பெயர் விவரம் வராதவர்கள் தொடர்பு கொள்ளவும்.

♥ பதிவுத் தபால் சிட்டை. சுயவிவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இடம்: இணுவில் மத்திய கல்லூரி, 24-2-99 புதன்கிழமை
யாழ். செயலகம், 25-2-99 வியாழக்கிழமை
நேரம்: காலை 9-00 மணி

ரி. சந்திரகாசன்
தலைவர்
(சி/6599)

எஸ் ரமேஷ்
செயலாளர்
(J.D.U.G.U.)

## ஸ்ரீ செல்வா

சினிமா
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
பவன்கல்யான்,
கீர்த்திரெட்டி, நாகேஸ்
நடிந்த
**ஆனந்த மழை**
(நேரடி CD)
10. 30, 2. 30
[சி/6603]

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்!

அறிமுகம்
பவன்கல்யான்,
கீர்த்திரெட்டி, நாகேஷ்
நடித்த
# ஆனந்த மழை
பிரகாஷ்ராஜ், மகேஸ்வரி
நடித்த
# என்னோடு கலந்துவிடு
அடுத்த வெளியீடு!
# பேய் பங்களா
# பகையாளி

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
[சி/6622]

## கண்ணீர் அஞ்சலி

### பொன்னர் புலவர்

[புலவர் வீடியோ உரிமையாளர்]

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுப்பஸோ வீடியோ - ஓடியோ அன்ட்
கலர்லாப் ஸ்தாபனத்தார்,
யாழ்ப்பாணம்.

(சி/6604)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-02-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org